ஸ்ரீ

# நூற்றெட்டுத்திருப்பதியகவலும்,

# மணவாளமாமுனி நூற்றந்தாதியும்.

---

இராமநாதபுரம்

சதாவதானம்

முத்துஸாமியையங்கா ரென்கிற

## அனந்தாழ்வான்

அருளிச்செய்தவை.

---

ஷெயார் மாணாக்கர்

பெங்களூர்

சிலாசாஸநபரிசோதநாத்யக்ஷராகிய

ஆர். ஏ. நரஸிம்ஹாசாரிய(யம். ஏ.)ரால்

சென்னை

கணேச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

---

கீலக௵ .

*Registered Copy Right.*

விலை அணா - ௨.

குள் அப்பாகரத்தையேகூறிச்
வ ரென்பது பிரசித்தம்.

ாதபுரம் ஸம்ஸ்தானங்கட்கு வித்
ுக , கம்பராமாயணத்திற்குப் பொருள்
ால்வதில ., .ான ஆற்றலுடையவர்; மதுரைத்தமிழ்
ங்கஸ்தாபகரும் பாலவனத்தம் ஜமீந்தாருமாகியஸ்ரீமான்-
ப. 'டித்துரைஸாமித்தேவரவர்கள் இவ்வாசிரியரிடம் கம்ப ராமாயணமுழுவதற்கும் பொருள்கேட்டவர்கள். மற்றும் இவரிடம் கல்விபயின்றுதேர்ந்தவர்கள்—சேதுஸம்ஸ்தான வித்வான் ரா. இராகவையங்கார், இராமநாதபுரம் வித்வான் ரங்கஸாமியையங்கார், அரியக்குடி வித்வான் கிருஷ்ணமாசாரியர், ஆழ்வார்திருநகரி வித்வான் தேவராஜ ஐயங்கார், சேஷையங்கார், கிருஷ்ணையங்கார் முதலிய பலர். இவர் இராமநாதபுரத்திலும், ஆழ்வார்திருநகரியிலும் திருவல்லிக்கேணியிலும் மைசூரிலும் வசித்தபோது மிகப்பலர் இவரிடம் பாடங்கேட்டனர்.

அங்ஙனம் இவ்வாசிரியரிடம் படித்தவர்களில் யானுமொருவனென்பதை இங்குக்கூறுவது மிகையாகாதென்று எண்ணுகிறேன். அக்காலத்தில் தாமியற்றிய இவ்விருநூல்களின் கையெழுத்துப்பிரதியை ஆசிரியர் அடியேனிடம் அளித்து, அநுகூலப்படும்போது இவற்றைப் பதிப்பித்து வெளியிடுகவென்று கட்டளையிட்டருளினர். நெடுநாள்சென்றபோதிலும் இக்கைங்கரியம் என்னால்நடத்தப்படாமலேயிருந்தது. அதனை நிறைவேற்றுதற்கு இப்பொழுது சமயம்வாய்த்தமைக்கு ம ்கின்றேன்.

ங்கரித்தது, இப்பொழுதைக்குப் பதி
கு முன்பாகும். இவர்இந்நூல்களியற்

றியது, இப்பொழுதைக்கு
மூன்றுவருடத்திற்கு முன்பு.
ந்தபொழுது ஜ்யோதிஷம் வேட
கையில் வசித்திருக்கையில் மணவ
யருளினர்.

மற்றும் இவரியற்றிய தமிழ்நூல்கள்-திவ்வியதேச
விஷயமான அநேகம்பதிகங்களும், சூத்திரமும்உரை
வமைத்த சந்திராலோகமும், குருகைக்கலம்பகமும், சட
கோபமகாதேசிகனந்தாதியும் முதலியன.

எனது நண்பரும், கும்பகோணம் கவர்ன்மென்ட்
காலெஜ் தமிழ்ப்பண்டிதருமான வித்வான் ஸ்ரீ. உ. வே.
வை. மு. சடகோபராமாநுஜாசாரியருடைய துணைமை இப்பதி
ப்புக்கு மிகவும்உபயோகமாயிற்று; ஆதலால், அவர்பக்கல்
என்றும் நன்றிபாராட்டக் கடமைபூண்டுள்ளேன்.

பெங்களூர். }
1-11-08. }

இங்ஙனம்
ரா - நரஸிம்ஹாசாரியன்.

ஸ்ரீ

# நூற்றெட்டுத் திருப்பதியகவல்.

---

உலகுயராரங்கமுறையூர் தஞ்சை
அன்பில்கரம்பனூராதனூர்வெள்ளறை
கண்டியூராழுந்தூர்கவித்தலம்புள்ளம்
பூதங்குடிசிறுபுலியூர்குடந்தை
திருவிண்ணகரந்திருத்தலைச்சங்க
நாண்மதியந்திருப்பேர்நகர்திருச்சேறை
வெள்ளியங்குடியரிமேயவிண்ணகரம்
வண்புருடோத்தமமாலிநறையூர்
சித்திரகூடஞ்சீராமவிண்ணகரம்
காவளம்பாடிதண்ணமங்கை
நந்திபுரவிண்ணகரநாகையிந்தளூர்
கண்ணங்குடிதிருக்கண்ணபுரமணி
மாடக்கோயில்வைகுந்தவிண்ணகரம்
கூடலூர்வெள்ளக்குளமணிக்கூடம்
தேவனூர்தொகைதிருத்தெற்றியம்பலம்
செம்பொன்செய்கோயில்திருப்பார்த்தன்பள்ளி
சோழநாட்டிடைமறைசொற்பதிநாற்பதின்
மாலிருஞ்சோலைவரகுணமங்கை
புல்லாணிமெய்யம்புளிங்குடிமோகூர்
குருகூர்கோட்டிகூடல்வைகுந்தம்
குளந்தைகுறுங்குடிகோளூர்புதுவை
தொலைவில்லிமங்கலந்தாய்த்திருப்பேரை
சீவரமங்கைதிருத்தண்காலூர்
பாண்டிநாட்டிடைவாழ்பதிபதினெட்டின்
போற்றுமனந்தபுரம்புலியூர்செங்
குன்றூர்வித்துவக்கோடுமூழிக்
களம்வண்பரிசாரங்காட்கரைநாவாய்
வாறன்விளைவண்வண்டூர்வல்லவாழ்
திருக்கடித்தானந்திருவாட்டாறு
பகர்மலைநாட்டிடைப்பதிபதின்மூன்றின்

திருவகீந்திரபுரந்திருக்கோவலூர்நடு
நாட்டிடையிரண்டுநலந்தருபதியின்
அத்திமாமலையூரகந்திருத்தண்கா
புட்குழியட்டபுயங்கரீரகம்
காரகம்வெஃகாகள்வனூர்பாடகம்
நின்றவூரெவ்வுளூர்நிலாத்திங்கட்டுண்டம்
திருவேளுக்கைதிருக்கார்வானம்
பவளவண்ணம்பரமேச்சுரவிண்ணகரம்
திருவிடவெந்தைதிருக்கடன்மல்லை
அல்லிக்கேணிவளர்திருக்கடிகை
நீர்மலைதொண்டைநெடுநாட்டிடையின்
இன்புறும்பதிகளிருபத்திரண்டின்
வேங்கடஞ்சிங்கவேள்குன்றமயோத்தி
தேங்கியவதரியாச்சிரமநைமி
சாரணியம்பிரிதிசாளக்கிராமம்
கங்கைக்கரைவாழ்கண்டந்திருவாய்ப்
பாடிதுவாரகைபாற்கடல்மதுரை
வடநாட்டிடையின்மன்னியபதிகள்
பத்துடனிரண்டிற்பரமபதமெனுந்
திருநாடொன்றிற்சேர்த்துநூற்றெட்டில்
யதிபதியருளாலியற்றியதிருநா
ராயணபுரந்திருராசமன்னார்கோயில்
மன்னியவிருந்தாவனம்பெரும்பூதூர்
மெய்ப்புகழ்ப்பாபவிநாசஞ்சீர்முட்டம்
புராணநூற்றலங்கள்போற்றுமோராறின்
உலகிடைமற்றுளவோங்கியபதியின்
மலர்மகளுடனேமன்னியதிருமால்
ஏழையேனுளத்திலிருந்திங்
கூழியினழியாவுலகளித்திடவே.

நூற்றெட்டுத்திருப்பதியகவல் முற்றிற்று.

ஸ்ரீ

# மணவாளமாமுனி நூற்றந்தாதி.

---

## காப்பு.

### நம்மாழ்வார்.

*மன்னுபுகழ்க்கோயின்மணவாளமாமுனிவன்*
*றன்னடிமீதந்தாதிசாத்தவே—யின்னமுதின்*
*செந்தமிழால்வேதச்செழும்பொருளைமாநிலத்தே*
*தந்தருண்மாறன்றாள்சரண்.*

### எம்பெருமானார்.

*தாடொடர்புநின்பாற்றழுவாதவர்க்கிலைநம்*
*வீடடைதலென்றுவிளம்பவரி—நீடணையாய்*
*நின்றான்யதிபதியாய்நீணிலத்திலேயுதித்தா*
*னென்றானமக்கேதிடர்.*

---

## நூல்.

*பூமாதிலங்குமணிமார்பரங்கர்புகழ்ந்திடத்தென்*
*பாமாறன்வேதத்தமிழின்பொருளைப்பகர்ந்தருளுஞ்*
*சீமான்குருகைமணவாளமாமுனிசேவடியாந்*
*தேமாநிழலுண்டடைவார்விடாய்கெடச்செய்திடுமே.* (க)

*செய்யனந்தாமரைப்போதுற்றுறங்குந்திருவரங்கத்*
*தையனந்தாதருண்மந்திரமுண்டஃதன்றிவெண்மை*
*மெய்யனந்தாழ்வான்மணவாளமாமுனிமென்கழலுண்*
*டுய்யனந்தாபமறத்தொலைத்தின்பமுறுவதற்கே.* (உ)

*உறுபொருளின்பமுந்தாயுமெய்த்தந்தையுமொண்குருவு*
*நறுமலரிந்திரைநாதனுமற்றுமிந்நாணிலத்தோர்*
*சிறுமையைநீக்குமிராமாநுசனெனச்சிந்தைசெயுந்*
*திறமையன்கோயின்மணவாளமாமுனித்தேசிகனே.* (ங)

தேசிகர்தங்களடிப்போதுளத்திடைச்சேர்த்தியவர்
பேசியநூல்வழிச்சேர்திருவாய்மொழிப்பிள்ளையன்பால்
வீசியகீர்த்திமணவாளமாமுனிமென்கழலை
நேசியுநீணிலத்தீருமதுட்டுயர்நீங்கிடுமே. (௪)

நீங்கினதீயவினையாளர்கூறுநெறிகளெலாந்
தேங்கினவெங்குமகிழ்மாறன்வேதச்செழுந்தமிழ்க
டாங்கினமன்னுயிர்கண்மால்பரனெனச்சாற்றுதலை
யோங்கினஞானமணவாளயோகிவந்துற்றபின்பே. (௫)

உற்றினிதோங்குமனமேயுனக்கோருறுதிசொல்வ
னிற்றிடவேண்டும்வினைப்பூரியருடனேசித்திடே
னற்றவர்போற்றுமணவாளமாமுனிநம்பியருள்
பெற்றிடினீதரப்பெற்றிடுவார்பலர்பேரின்பமே. (௬)

பேரியல்கொண்டபெருமாளருளிற்பெருமைபெற்ற
வாரியன்கோயினங்கந்தாடையண்ணனையார்ந்தபின்மெய்ச்
சூரியனாயமணவாளமாமுனிதொல்புகழைப்
பாரினிற்பாடிப்பயன்பெறலெற்கொருபாரமன்றே. (௭)

பாராளுமன்னர்பதிதொறும்போயவர்பால்வருந்திச்
சீராயனந்தங்கவிபாடுவீர்நறுஞ்செங்கமலத்
தாராளன்கோயின்மணவாளமாமுனிதாளிணையை
யாராதனஞ்செயிலெய்திடுமிங்கங்குமானந்தமே. (௮)

ஆனந்தமிங்குமணவாளமாமுனியன்பெனக்கொண்
ஞானந்தவாதபெரியோரவன்பெயர்நாடியதாற்
றேனந்துமின்சுவையாம்பாவெனத்துதிசெய்வரல்லா
லீனந்தரும்பாவெனவிகழாரிதையென்றைக்குமே. (௯)

என்றிலங்காரணங்காணாவரும்பொருளிந்திரைப்பெ
ணின்றிலங்கஞ்சனமேனியம்மான்செய்நியமனத்தா
லொன்றியகீர்த்தியிராமாநுசன்பின்புயிர்க்கிரங்கி
யின்றதையோம்பமணவாளயோகியெய்தினனே. (௧௦)

எய்தியநள்ளிருள்போமாறுலககலிற்கடனெய்
பெய்தினனுஞ்சுடரேற்றியபொய்கைப்பிரான்றமிழின்
மெய்தெரிந்தோதுமணவாளமாமுனிமேவியதிப்
பொய்திகழ்ஞாலத்துயிர்க்கின்பமீந்துபுரந்திடவே. (௧௧)

புரந்தரனுமெனப்பூபதியாகிப்பொருண்முழுதுந்
தரந்தரம்பெற்றிடவேண்டிவந்துன்றனைச்சார்ந்திலனின்
னிரந்தரமெய்யன்புடையார்பதத்தென்னினைவுநிற்க
வரந்தரவேண்டுமெய்த்தேவேமணவாளமாமுனியே. (௧௨)

மாமகிழ்மாறன்றமிழார்கலிக்கண்வரையெனத்தன்
னுமடுத்தாரியர்நூலரவார்த்துநலிதரச்செய்
தேமதிவாய்ந்தநரர்க்கமுதாப்பொருளீந்ததுகாண்
கோமலிகீர்த்திமணவாளமாமுனிக்கொண்டனின்றே. (௧௩)

கொண்டதன்னுள்ளத்திருள்போயிறையருள்கூடியுய்யப்
பண்டைநன்ஞானநிறைவிளக்கேற்றியபண்பினன்சீர்த்
தொண்டர்கள்போற்றுங்கடன்மல்லைநாதன்றுணையடியை
யண்டிநின்றேத்துமணவாளமாமுனியாரியனே. (௧௪)

ஆரிருண்மாண்டபின்கோவலுண்மாமலராள்பதியை
நேரினிற்கண்டுநெடுந்தமிழ்பாடியநின்மலன்றன்
சீரினிற்செல்லுமணவாளயோகியைச்சிந்தைசெயில்
வேரினிச்செல்லாதறுப்பானவனம்வினைகளையே. (௧௫)

வினையாளர்கூறுஞ்சமயங்கடோறும்விழைந்துமுத்தி
தினைவேதுந்தோன்றற்கிடந்திலவெனநீக்கியரி
தனையேதுதிக்குமழிசைக்கிறைவன்றமிழ்ப்பொருட்டே
னினையேபருகுமணவாளமாமுனியென்குருவே. (௧௬)

குருகைவந்தோங்குமகிழ்மாறன்வேதக்குரைகடல்க
டருந்தொடைச்சொல்லமுதுட்கொடுகோயிற்றடவரைநின்
றிரும்புவிமீதுயிர்க்கூழின்புறப்பொருளேபொழிந்து
வரும்புயல்காணுமணவாளமாமுனிமாதவனே. (௧௭)

மாதவன்வேங்கடத்தெய்வுருவாகவுமாவனென
வோதியசேரலர்கோன்குலசேகரனொண்டமிழ்க்க
ணாதரங்கொண்டமணவாளமாமுனிக்கன்பிலரிப்
பூதலத்தேவினைக்காளாகநின்றுபுழுங்குவரே. (௧௮)

புழுங்கும்வழுதிப்பெருமான்மனத்திருள்போகவின்பத்
தழுங்கும்படிமால்பரமென்றுணர்த்துமமலனின்சொல்
விழுங்குங்குணங்கொண்மணவாளமாமுனிமேயபின்பே
யொழுங்கும்பொறையுங்குணமுமறிவுமுயிர்க்குற்றவே. (௧௯)

உயிர்க்கின்பநல்கும்பொருட்டன்றுவில்லிபுத்தூரெழுஞ்செங்
கயற்கண்ணியாயர்தங்கன்னிகையாயநுகாரஞ்செய்து
தயிர்க்கஞ்சியாடெம்பிரான்றிருப்பள்ளியிற்றந்ததமிழ்ப்
பயிர்க்கம்புதங்காண்மணவாளமாமுனிப்பண்டிதனே. (௨0)

பண்டரும்வேதப்பசுந்தமிழ்மாலையும்பைந்துளவத்
தண்டொடையுங்கொடுதென்னரங்கேசனைத்தாழ்ந்தெழுப்புந்
தொண்டர்தம்பாதத்துகளடிப்போதைத்தொழுமவரை
மண்டிநின்றேத்துமணவாளமாமுனிவையகத்தே. (௨௧)

வையம்புகழவருபாணர்கோனடிவாழ்த்துமெங்க
ளையன்குருகைமணவாளமாமுனியன்பவர்க்குஞ்
செய்யுங்கிரிசைகள்கேளீரிகத்தினிச்சென்மவினை
நையும்படிசெய்தழியாதமுத்தியுநல்கிடுமே. (௨௨)

இடுமேவினைக்கணிடுவதல்லானரகெய்துவித்து
விடுமேபவமிப்பவத்தைமெய்யென்றுவிரும்பியவத்
தொடுமேயுழலுமவர்தம்முறவையொழித்தருட்கண்
கொடுமேனிலவுமணவாளயோகியைக்கூடுளமே. (௨௩)

கூடாரைவெல்லும்பெருமாளரங்கர்குணங்களைக்கொண்
டாடாவவரதருள்பெற்றிருப்பினுமாங்கவர்க்குன்
னேடார்மலர்ப்பதத்துண்டேற்றொடர்பவரீவர்முத்தி
வீடாருமின்பமணவாளமாமுனிமெய்ம்மையிதே. (௨௪)

மையார்கருங்கண்மடவார்மயக்கின்மயங்கியவர்
கையாளினின்றுமவமேபுரிந்துங்கலங்கியிந்தப்
பொய்யாமுலகிலுழல்கின்றவென்னைப்புரந்திடுதே
லையாகடமைமணவாளமாமுனியற்புதனே. (உரு)

அற்புதநங்கைவடிவினின்றேமடலானறையூர்ப்
பொற்பமர்பூமகள்கேள்வனைப்பாடிப்புகழ்ந்திடுநங்
கற்பகமங்கைப்பரகாலன்செஞ்சொற்கவிகளினு
ணற்பொருடேருமணவாளமாமுனிநாயகமே. (உசு)

நாயகநங்கைமகவெனத்தோன்றியநம்பியன்றிப்
பேயகமற்றொருதெய்வந்தொழாதெனப்பேசியமெய்த்
தூயகுணத்திருக்கோளூரிறைதன்றுணையடியை
நேயம்வைத்தேத்துமணவாளமாமுனிநீணிலத்தே. (உஎ)

நிலத்தின்மறைப்பொருண்முற்றுந்தமிழினிகழ்த்தியகோ
நலத்தின்பெருமையவன்பாவருமைநவையிலுயிர்ப்
புலத்திற்றெரிக்கமணவாளமாமுனிபோந்திலனேற்
றலத்திற்புதைத்தபொருள்போலநின்றுதளர்வுறுமே. (உஅ)

தளராரிடுக்கண்களெய்திலுமின்பங்கள்சார்ந்திடினுங்
கிளரார்குருகைப்பெருமான்மறையிற்கெழுமியசொல்
வளராநிலவும்படிசெய்தநாதமுனிமலர்த்தா
ளுளராரையுஞ்சொன்மணவாளயோகியையுன்னினரே. (உகூ)

உன்னற்கரியமறைகளையாயிரமொண்டமிழாற்
பன்னற்குலகில்வருஞ்சடகோபனைப்பத்தியென்று
மன்னப்பதிவைத்திறைஞ்சுமணவாளமாமுனியா
மென்னப்பனுண்டெனக்கிங்கொருநாளுமிடரிலையே. (௩0)

இடங்கொண்டகீர்த்திமணவாளமாமுனியென்னிபம்பூந்
தடங்கொண்டதென்குருகாபுரிமாறன்றமிழ்மறையின்
றிடங்கொண்டவின்பப்பொருண்மதம்பாயச்சினந்துமுக்கோ
லுடன்கொண்டுவந்தவப்போதற்றவாதியருக்கங்களே. (௩க)

கள்ளார்மலர்ப்பொழிற்றென்னரங்கேசனைக்கண்டுதொழு
துள்ளாருறவையொழித்துய்யக்கொண்டார்தமொண்கழற்கண்
விள்ளாதவன்பன்மணவாளமாமுனிமென்பதநீர்
கொள்ளாரிகத்தினிற்றள்ளார்பிறப்பின்கொடுமையையே. (௩௨)

கொடுப்பானருளைக்கொடுத்தும்வினைகள்குலைந்திடவந்
தடுப்பானெதிரினடுத்தின்பமென்னுமலைகடற்கண்
மடுப்பானிகத்தின்மடுத்ததன்பின்றிருமால்பதத்தில்
விடுப்பான்குருகைமணவாளயோகியைமேவிடினே. (௩௩)

மேவார்தமக்கிலையெங்கோனரங்கன்விரைமலர்ச்செம்
பூவார்கழலைப்பொருந்திநல்லின்பம்புசித்திடுத
லாவாவெனத்திரிந்தாலென்பயனுண்டடைமனமே
பாவார்குருகைமணவாளமாமுனிபாதத்தையே. (௩௪)

பாதகராயினுந்தஞ்சநின்றாளெனப்பற்றிலவர்
மேதகவாய்ந்துநல்லின்பமெய்ஞ்ஞானங்கண்மேவியிகத்
தேதகவோடழியாமுத்தராகவிருப்பரென்றும்
போதகமங்கொண்மணவாளமாமுனிப்புண்ணியனே. (௩௫)

புண்ணியநோன்புகண்முற்றுந்துறந்துபுகலெனையே*
நண்ணுதிபாணினைச்செய்குவல்பாவநவையறவென்
றண்ணன்முன்போதியநீதியெலாநீயவதரிக்க
மண்ணினிற்றேர்ந்ததுயிர்காண்மணவாளமாமுனியே. (௩௬)

முனிந்தாலுந்தள்ளிமிதித்தாலுஞ்சேயனைமுன்பவடன்
மனந்தானிரங்கும்படிக்கழுமல்லதுமாட்டகலா
தினன்றுனிகர்க்குமணவாளமாமுனியென்னப்பநீ
சினந்தாயெனினும்விடாதுன்கழலையென்சிந்தனையே. (௩௭)

சிந்திக்கவின்பந்தருமரங்கேசன்றிருவருளாற்
பந்தித்ததொல்வினைதீர்மணக்கானம்பிபாதத்தையே
வந்திக்குங்கோயின்மணவாளமாமுனிவைபவநும்
புந்திக்கணின்பம்புகட்டும்புலவீர்புகழுமினே. (௩௮)

புகழும்பொருளும்பொருந்தியிப்பூதலம்போற்றவின்பத்
தகழுமவருமழியாதிருந்திலராதலினு
லிகழும்புவிவாழ்வினைவெறுத்துன்னடியெய்தியன்பிற்
றிகழும்படிநீமணவாளமாமுனிசெய்தருளே. (௩௯)

அருளாழியேந்தும்பெருமான்சமயத்தணிவிளக்கா
விருள்யாவுநீக்கும்யமுனைத்துறைவனிணையடிதன்
பொருளாயுகந்தமணவாளமாமுனிபூங்கழலைத்
தெருளார்ந்திறைஞ்சுமவர்க்கினிமேலில்லைசென்மங்களே. (௪0)

சென்மப்பெரும்பிணிக்குள்ளூற்றுழலுஞ்சிறியவர்தங்
கன்மக்கடுங்கனற்கோர்கடைக்காரெனக்கண்ணபிரான்
றன்மப்பயிர்க்குநல்வித்தெனத்தோன்றியதாழ்விலியுள்
வன்மத்தைநீக்குமணவாளமாமுனிவண்மைநன்றே. (௪௧)

வண்மைப்பராங்குசன்றாளேகதியெனவாழ்த்துமனத்
திண்மைப்பரமகுருவாயுதித்ததிருவரங்கத்
துண்மைப்பொருடேர்பெருமாளரையரொளிர்கழல்சேர்
தண்மைக்குணத்துமணவாளமாமுனிதாள்சரணே. (௪௨)

தாளானிலம்பண்டளந்தோனழகன்றனக்கன்புகொண்
டாளாகிநின்றதிருமாலையாண்டானருளமுதுண்
ணீளார்குணத்துமணவாளமாமுனிநீர்மைசொல
மாளாதிகத்திற்றலையாயிரங்கொண்டவாளிக்கே. (௪௩)

வாசங்கலந்ததுழாய்மாலைசூடிவரும்பெருமா
னேசங்கலந்ததிருக்கோட்டிநம்பிநிலையுணர்ந்து
பேசும்புகழெம்மிராமாநுசனடிபெற்றிலகு
தாசன்குருகைமணவாளமாமுனிதாள்கதியே. (௪௪)

கதிகாட்டுநூலிதுவோவதுவோவெனக்கற்றுநுங்கண்
மதிகாட்டும்பல்வழிச்சென்றுழல்வீர்திருமாலருணற்
பதிகாட்டுமின்பப்பயன்காட்டுமாறன்பழமறையின்
றுதிகாட்டுங்கோயின்மணவாளமாமுனிசொன்னலமே. (௪௫)

சொல்லான்மறைப்பொருளெல்லாந்தமிழிற்றுலங்கிடச்செய்
நல்லார்குருகைவகுளாபரணனகுமலர்த்தா
ளல்லாதிறைஞ்சாத்திருமலைநம்பியடியலதுள்
புல்லான்றுதியான்மணவாளமாமுனிபூதலத்தே. (சசு)

பூதங்கவர்தெறுக்கால்கொட்டுலைகவிபோன்றநெஞ்சை
யேதம்படர்புலத்தூடுற்றுழலாதிருத்தியின்பப்
போதம்பயிற்றியமாறனேர்நம்பிபுகழ்கொளிரு
பாதம்பரவுமணவாளமாமுனிபண்பினிதே. (சஎ)

பண்பாடளிகுடைந்தூதுந்துளவப்பசுந்தொடையோ
டொண்பாவணியலணிதேவராசனுகப்பவெழு
நண்பார்தவத்துத்திருக்கச்சிநம்பிநலங்கொடிந்தத்
திண்பார்புரக்குமணவாளயோகியென்சேமவைப்பே. (சஅ)

வைப்பாயவான்பொருளெல்லாமுனதுமலரடியென்
றெப்போதும்வாழ்த்தியிருக்குமெய்ஞ்ஞானியரீட்டமெனை
யிப்பாவியாரென்றிகழாதணைக்குநல்லின்பமதி
தப்பாதெனக்குமணவாளமாமுனிதந்தருளே. (சகூ)

அருமாமறைப்பொருண்முற்றுந்தமிழிலருளியவெம்
பெருமான்குணங்கண்டுவந்துவந்தேத்தும்பெரியநம்பி
யிருமாமலர்ப்பதத்துள்ளன்புகொண்டவெழிற்குருகை
வருமாதவத்துமணவாளயோகியென்மாநிதியே. (ருo)

நிதியாமறைவீந்துலகங்கலியாணிரப்புறுங்கால்
விதியாரணையினருளாலெழுந்தவிமலனின்ப
மதியார்குணத்தெம்மிராமாநுசன்றன்மலரடியே
கதியாயுகந்தமணவாளமாமுனிகார்முகிலே. (ருக)

காரேய்கருணையிராமாநுசன்றன்கழற்கன்பினர்
யாரேயெனினுமவர்பான்மருவுமருங்குணத்துச்
சீரேய்குருகைமணவாளமாமுனிச்செல்வன்றன்வண்
பேரேதுதிக்கிற்றருவானழியாப்பெரும்பதமே. (ருஉ)

பெரும்பதம்வேண்டியென்போலியர்போனிதம்பேதுற்றுநீ
கரும்பினுமின்சுவைப்பாமாலைதந்துகடலுலகந்
தரும்புகழ்கொண்டவிராமாநுசனடிதாழ்ந்திரந்து
வருந்தியதென்கொன்மணவாளயோகியுன்மாயநன்றே. (௫௩)

மாயப்பெரும்பிணிக்குள்ளுற்றுநாளுமடிதருமிக்
காயத்தையான்பரித்தேங்காதுநிற்கக்கடைக்கணிப்பாய்
தாயொத்தவின்பத்திராமாநுசனடிதாழ்பவர்பா
னேயத்தைவைக்குமணவாளமாமுனிநீமகிழ்ந்தே. (௫௪)

நீமகிழ்ந்தென்பாலருள்செயவேண்டுவனீணிலத்தோர்
கோமகனாயினுமல்லாதிரக்குங்குறையுறினு
நாமனநின்றிருநாமங்குணங்கணவின்றெணத்தென்
பாமலிகீர்த்திமணவாளமாமுனிபண்ணுதற்கே. (௫௫)

பண்ணார்பொழில்ரங்கம்முதலாயபதிகளொரு
கண்ணாய்மலிந்தவிராமாநுசற்கொடுகாமருசீ
ரெண்ணார்பரவுமணவாளமாமுனியெய்தியபின்
றண்ணார்மலர்க்கணிரண்டாகிநின்றுதளிர்த்தனவே. (௫௬)

தளிர்த்ததுசீலத்திராமாநுசன்றன்றரிசனமே
குளித்ததுமன்னுயிரின்பக்கடற்குட்கொழுந்தமிழ்ப்பாத்
துளித்ததுநான்மறையோடுலகெங்குந்துழாயவன்பேர்
களித்ததுகோயின்மணவாளயோகியைக்கண்டவன்றே. (௫௭)

கண்டவருள்ளக்கசடறுத்தாட்கொளுங்கார்முகினேர்
மண்டலத்தோங்குமிராமாநுசமுனிவைபவமுட்
கொண்டறத்தேதளிர்த்தாருயிர்க்கீயுங்குருகைப்பிரான்
றண்டமிழ்ப்பாவைமணவாளமாமுனிதண்ணளியே. (௫௮)

அளிக்குமினித்தாயகடுற்றுயிருழலல்லலின்றிக்
களிக்குமதுநல்லறத்தேதளிர்த்திடக்கண்டுமெண்விண்
டுளிக்கும்புகழெம்மிராமாநுசனருட்டேய்த்திரைவாய்க்
குளிக்குந்தவத்துமணவாளயோகிகுணத்தியல்பே. (௫௯)

குணமேதுதொண்டெட்குறியேதுவேதக்கொழுந்தெழுநன்
மணமேதுஞானமணமேதுதீயவலிகொள்வினைத்
தணவேதுதன்மகிணைவேதுபாரிற்றனமெனவந்
தணவாதிருக்கின்மணவாளமாமுனியாருயிர்க்கே. (௬௦)

ஆருண்டெனக்கிணையென்றைவர்முன்பருளச்சுதன்றன்
பேருண்டருங்கதிசேர்ப்பதற்கென்றெனும்பேய்மதியீர்
பாருண்டகீர்த்திமணவாளயோகிதன்பற்றிலர்க்குத்
தாருண்டுசீருண்டுசோறுண்டுபேருண்டுதாயுமுண்டே. (௬௧)

தாயுண்டுபண்ணியதந்தைநீயென்றிருப்பார்தமக்கு
வாயுண்டுநற்கதிதாவென்றுகேட்கவோர்வண்மையற்ற
தீயுண்டநெஞ்சத்தென்போலியர்க்கென்னுண்டுசென்றிரக்க
நீயுண்டுபண்ணின்மணவாளமாமுனிநேருமன்றே. (௬௨)

நேரோதனத்திற்கிரங்கிநைந்தாயயினோர்விழியார்
வாரோர்தனத்திற்கவலமுற்றாயிதுவன்றிநெஞ்சே
தாரோதுங்கீர்த்திமணவாளமாமுனிதாணிலையு
ளாரோடுறவுண்டுலைந்தாய்வலியுனக்கியாதுளதே. (௬௩)

உளராகவென்றுநினைந்தேயுரைப்பர்பல்லோர்தவத்துட்
டளராவருந்துவர்வீணைதெய்வந்தனைப்பணிந்து
வளராவிரங்குவர்பாரின்மணவாளமாமுனிவன்
கிளராருயிர்க்கின்பநல்கவந்தேய்ந்ததைக்கேட்டுமென்னே. (௬௪)

கேட்டாகமங்களுடனீறணிந்தரன்கேடிலியென்
றாட்டாதரத்துலைந்தின்பாமறைதேர்ந்துகந்துவில்வக்
கோட்டுநின்றுகுதித்துவெங்கூற்றைக்குதித்தவெம்பார்
மாட்டோங்குமன்பிற்சிறந்தோன்மணவாளமாமுனியே. (௬௫)

மாமதங்கொண்டபரவாரணங்கண்மடியவெழுந்
தேமலிசிங்கமிராமாநுசனடியென்னநின்ற
பூமலிகீர்த்திமுதலியர்கோனருட்பொற்பையுன்னி
யாமகிழ்ந்தோதுமணவாளயோகியென்பாக்கியமே. (௬௬)

எனக்கீந்தபேறிந்தநாளூரவனுமின்றெய்தவரு
டனத்தொன்றுபூமகள்கேள்வாவென்றேத்தியசற்குணத்தெம்
மனத்தொன்றிநின்றவக்கூரேசன்றனிலேவாழ்த்திடுநல்
லினத்தொன்றுகீர்த்திமணவாளமாமுனியென்னப்பனே. (சுஎ)

என்னைப்பவக்கலிக்குள்ளுற்றுழலாதெடுத்தருள்வான்
மன்னித்திகழ்வள்ளல்பட்டர்தஞ்செய்யமலரடியைப்
பன்னிப்பரவுமணவாளமாமுனிபான்மையிலொன்
றுன்னப்பவம்போமெனிலென்னுரூதருளுற்றவர்க்கே. (சுஅ)

உற்றார்கலிக்கணுழல்வார்தமக்குதவோர்தருவாய்க்
கற்றாங்கர்க்குங்குணங்கொணஞ்சீயர்கழறியநூல்
பெற்றார்க்குமோதுமணவாளமாமுனிபேர்சொலவாய்
சற்றேதிறக்கிற்றிறந்திடுமுத்தித்தலைக்கதவே. (சுக)

தலையாயிரங்கொண்டசேடன்றன்மேற்றுயிறண்டுளவ
மலையார்புயத்துத்திருவரங்கேசன்வடிவெனவிவ்
வலையார்நிலத்திற்பொலிந்தநம்பிள்ளையருளினுக்கோர்
நிலையாயகோயின்மணவாளயோகியென்னெஞ்சத்தனே. (எ௦)

நெஞ்சிற்கறையற்றிடத்தமிழ்வேதத்தானீள்பொருளை
யஞ்சொற்களால்வெளியாக்கும்பெரியவாச்சான்பிள்ளையைக்
கொஞ்சிப்பரவுமணவாளயோகிமுக்கோல்கொண்டிக்
கஞ்சத்தலைப்புவிமீதுயிர்க்கின்பினைக்காட்டுதற்கே. (எக)

காட்டாவின்பின்செஞ்சிலம்படிநோவக்களித்தெழுங்கா
ரூட்டாகமங்கையுறைமார்பரங்கனுகக்கவிரு
பீட்டாளர்தந்தவடக்குத்திருவீதிப்பிள்ளைபந்தாள்
சூட்டாற்பரிக்குமணவாளயோகியுட்சோர்விலனே. (எஉ)

சோர்வுற்றமன்னுயிர்க்குள்ளன்புதாண்டத்துணிந்துமறைச்
சார்வுற்றமெய்ப்பொருளெல்லாந்தமிழிடைத்தந்தநந்தாத்
தேர்வுற்றஞானத்துலகாரியனருட்செவ்விமுற்று
மார்வுற்றசிந்தைமணவாளயோகியுண்டாள்வதற்கே. (எங)

ஆளாகிநிற்பவர்க்கில்லைநெஞ்சேயிகத்தல்லலென்று
நீளாசலாம்புயத்திந்திரையோடுறைநேமியங்கைக்
காளாம்புதத்தெந்தைநல்வீட்டினின்பமுங்கைக்கொள்வராற்
றுளாளன்கோயின்மணவாளமாமுனிதாளிணைக்கே. (எச)

இணையாருனக்குண்டுநெஞ்சேயறிவிலிதுவதுவென்
றணையாதணைந்தவரோடுறவுறலன்றியன்பிற்
றுணையாங்குருகைமணவாளமாமுனிதொண்டர்தங்க
டிணையாரிடந்தொறும்போய்ப்பணிவானருள்செய்தனையே. (எரு)

நையேனினியிந்தநானிலத்தேயொளிர்ஞாயிறென
மையேயகற்றித்திருவாய்மொழிப்பிள்ளைவண்மைசொல்லி
மெய்யேபரவுமணவாளமாமுனிமேற்றுதிகள்
செய்யேனெனினுமுள்செய்தவர்தாடொழச்சிந்தித்தே. (எசு)

சிந்தாகுலமறுத்தெங்கோனரங்கன்றிருவடியுட்
டந்தாதரத்திற்பணிபொழுதோர்துயர்சாற்றவுன்னிச்
செந்தாதிலகியவாடைமுக்கோல்கொடுசீர்யதியாய்
வந்தானுலகைமணவாளமாமுனிவாழ்விக்கவே. (எஎ)

வாழ்வைப்பெரிதெனவெண்ணிநையேலதுவான்மினினுந்
தாழ்வுற்றழிதருந்தன்மையதாதலிற்சார்ந்திலர்நூல்
சூழ்வுற்றஞானியர்நெஞ்சேவெறுத்தச்சுதனருட்க
ணாழ்வுற்றகோயின்மணவாளமாமுனிக்கன்புகொள்ளே. (எஅ)

அன்பேயுருக்கொடுநின்றதுபோனின்றனைத்துயிர்க்குந்
துன்பேயகற்றியறத்தேபயிற்றியித்தொல்லுலகி
லின்பேகொடுக்குமணவாளமாமுனியிங்குவந்த
பின்பேவருத்தந்தவிர்ந்தாரெமனும்பிரமனுமே. (எகூ)

மனமாசகற்றத்திருவரங்கேசன்மகிதலத்திற்
றனமாயுகந்தவிராமாநுசனிருதாளிணைமீக்
கனமாவெழுந்துமணவாளமாமுனிகாதல்கொடு
தினமேபொழிந்தகவியன்றியுண்டுகொல்செப்புதற்கே. (அ0)

செப்பார்குணத்தெம்பிராமாநுசன்றன்றிருவடியை
யெப்போதும்வாழ்த்துமணவாளயோகியையேத்தியென்றுந்
தப்பாதவன்செய்திருவாய்மொழிநூற்றந்தாதியையுள்
வைப்பார்தமக்கிணைபாரீரெவருண்மொதலத்தே. (அக)

தலத்தாரணந்தமிழ்தந்தநம்மாழ்வார்சரித்திரநூல்
வலத்தாசிரியர்தம்வைபவமன்னர்வரன்முறையுண்
மலத்தாசகற்றவுபதேசரத்தினமாலையென்றே
நலத்தாலுரைத்தான்மணவாளமாமுனிநானிலத்தே. (அஉ)

நானினிவேண்டுவதுண்டுகொன்முற்றுணர்நாயகவுன்
பானினையொன்றிப்பரவுதன்றியோர்பற்றுமின்றி
மேனிலைகாணமணவாளமாமுனிமெய்ச்சுடரே
நீநிழல்போற்பிரியாதுறுமென்னுளநேர்செயவே. (அங)

செயலேதுமின்றிவருந்துயிருட்கொடுதேர்தரவோர்
புயலேய்குணத்துலகாரியன்செய்தபொருவில்கலை
யயலேபுதைத்தமணிபோற்கிடந்தவரும்பொருளி
ளியலேவிரித்தான்மணவாளமாமுனியெந்தைவந்தே. (அச)

எந்தையிராமாநுசனடிப்போதையெப்போதுமென்னுஞ்
சிந்தையன்கோயின்மணவாளயோகிதெளிதரமுன்
செந்தமிழ்வேதத்தரும்பொருளீட்டினசீர்மையெலாந்
தந்தனன்காண்பிரமாணத்திரட்டென்றசாத்திரத்தே (அரு)

சாத்திரங்கற்றும்பிறர்க்குரைத்தும்மதிற்றுமடங்காக்
கோத்திரரோடுங்குலாவுதல்விட்டுக்குருகைப்பிரான்
வாய்த்திரங்காட்டுமறைப்பொருண்முற்றும்வழங்கவந்த
பாத்திரன்கோயின்மணவாளயோகியைப்பற்றுநெஞ்சே. (அசு)

பற்றாமனிதரைப்பற்றியதாலென்பயனுளது
நற்றாயெனவெழுந்தாருயிர்க்கின்பநலங்கொடுக்குங்
கற்றார்பரவுமணவாளமாமுனிகான்மலரை
யுற்றாலொழியும்பவத்தேவருத்துநம்மூழ்வினையே. (அஎ)

ஊழிக்கடுங்கனற்குள்ளூற்றமான்போலுலேந்துலேந்து
தாழிப்பெருவயிற்ருேடுழல்வீர்கதிதாவெனப்போ
யாழிப்புவிக்கரசானவர்பாலிரந்தால்வருமோ
வாழிப்பதாம்மணவாளயோகியைவாழ்த்தலற்றே. (அஅ)

அற்றவர்போற்றுமணவாளயோகியருளியநூன்
முற்றுமிந்நூலிடைமுற்றிலவேயெனின்மூதுலகைச்
சிற்றவரங்கையுட்சேர்ப்பதற்காமெனிற்சிந்துவைக்கை
யிற்றவர்நீந்துதற்கேயுமென்ருலிதிலேயுமன்றே. (அகூ)

ஏயுங்குணத்துமணவாளயோகியிருந்தெண்மறைத்
தீயுமுயிர்க்குத்தன்போலருள்செய்யவெண்டிக்கயங்க
ளாயும்பரமதசிங்கங்களாயுமமைத்திலனேன்
மாயன்பொருளென்றுரைப்பதற்காங்கொலிம்மானிலத்தே. (கூ0)

மானிலத்தோங்குதென்சீவரமங்கைவளம்பதியுஞ்
ஞானியர்போற்றுமிராமாநுசமுனிநாயகத்தை
யீனமிலென்போலியர்தமைக்காக்கவினிதுவைத்தான்
கோனிலேகொண்டமணவாளயோகிகுணக்கடலே. (கூக)

கடலாடைமான்முலேபோன்மலிவேங்கடக்கார்வரைக்க
ணடலாழியங்கைப்பெருமான்பணிகொடிங்காருயிர்க
ளிடராழிநீந்தவிராமாநுசமுனியையிருத்திச்
சுடராயிலங்குமணவாளயோகிசுகிர்தமென்னே. (கூஉ)

சுகத்தேயுலகத்துயிர்வாழ்தரத்திருவுள்ளம்வைத்திச்
செகத்தேபரவத்தூர்ப்பட்டர்பிரானெனுஞ்சீயரைக்கொண்
டகத்தேய்பவத்தையறுத்துவிட்டான்குருகாதிபன்சொன்
முகத்தேயிலகுமணவாளயோகிமுறைதெரித்தே. (கூ௩)

முறையோர்ந்திலாதுழல்வார்தமைக்கண்டுமுதமொடவர்
கறையேயகற்[illegible]ணர்வேபயிற்றிக்கதிதருவான்
குறையேதுமின்[illegible]ரங்கந்தாடையண்ணனைக்கோயிலுக்கோ
ரிறையாகவைத்த[illegible]ணவாளயோகியன்பென்சொல்லனே. (கூச)

ரல்லுமெறும்பியப்பாவொடப்பிள்ளாரைத்தூவழிக்கட்
மசல்லுங்குணத்தினப்பிள்ளையைநீரிச்செகத்துயிர்க
ளல்லும்பகலுமரியேதுதித்திடவாக்குவிப்பா
ணில்லுமினென்றன் மணவாளமாமுனிநேசம்வைத்தே. (கரு)

நேசித்துநந்திருமாலின்சமயநெறியிகழ்ந்து
பேசித்திரியும்பிறமதத்தீயர்தம்பேரடக்க
வாசற்றபிரதிவாதிபயங்கரவண்ணனுக்கோர்
தேசைக்கொடுத்தான் மணவாளமாமுனிசிந்தைசெய்தே. (கசு)

சிந்திக்கவிந்தமணவாளமாமுனிசெய்ததுபோ
னந்தித்திரைப்புவிமீதெவர்செய்தனர்நாமினிமேற்
பந்தித்ததொல்வினைக்குள்ளுற்றுவாடும்பரிசுளதோ
வந்தித்துவாழ்த்திவழிபடுவாமென் மடநெஞ்சமே. (கஎ)

நெஞ்சேநமக்குமணவாளமாமுனிநீணிலத்திற்
செஞ்சேமமுற்றிடச்செய்தவிந்நன்மையைச்சிந்தித்திடி
னஞ்சேய்வினையுநலமாய்விடுமொருநாளுமதற்
கஞ்சேல்வருந்தேலிருப்பாயவன்றனருணயந்தே. (கஅ)

நயவேனினியொருதெய்வத்தைநாளுமந்நான்மறையி
னியலேயுணர்த்துமிராமாநுசனெனிலின்பமுற்றி
மயலேபெருகுமணவாளயோகியைவாழ்த்துவர்த
மயலேதிரிந்தவர்க்காட்செய்யவென்னுளமைந்ததுவே. (கக)

அமையார்புயத்திந்திரைவாழுமார்பனரங்கன்பதந்
தமையேயடைதனின்றண்ணளியால்வரிற்சார்வதல்லா
லெமையேயழைத்தவனீயினும்வேண்டுவதில்லைகண்டாய்
கமையேநிறைந்தமணவாளயோகியென்கற்பகமே. (க00)

கற்புக்கணிகலமாயபின்னோர்தங்கணவனல்லா
லற்புக்கிடங்கொடார்நற்பரனெய்தினுமன்னரைப்போற்
சொற்புத்திநின்னடிப்போதன்றியொன்றைத்தொழாதுசெல்வப்
பொற்புற்றகோயின் மணவாளயோகிப்புகழ்ப்பொருளே. (க0க)

பொருளைப்புதல்வரைப்பூமியைமாதரைப்போற்றவுன்னி
மருளுற்றுலகில்வருந்துநெஞ்சேபொன்மதிலரங்க
னருளைப்புனைந்தமணவாளமாமுனிக்கன்புகொண்டாற்
றெருளுற்றஞானஞ்செறிவுற்றுநற்கதிசேர்குவமே. (௧௦௧)

சேராதகன்றபெண்ணையிர்ப்பின்றிவந்தேபதிபார்
றூராயருளையெனவேண்டல்போலகின்றுளடைந்தேன்
சீரார்குணத்துமணவாளயோகியுன்சிந்தையென்றோ
வோராதகற்றிற்கதிவேறிலையெனக்குத்தமனே. (௧௦௨)

உத்தமன்கோயின்மணவாளயோகியையுன்னியுன்னி
நித்தமும்போற்றுநெறியினர்தாடொழுநேசநெஞ்சில்
வைத்தவர்தாமத்திருநாட்டிடையின்மலர்மகள்கோன்
கைத்தலத்தாலணைப்புண்டிருப்பாருட்களிப்படைந்தே. (௧௦௩)

அடைந்தேன்குருகைமணவாளமாமுனியம்புயத்தாள்
படைந்தேயினியெனைத்தீண்டாதுதீயவினைகடலைக்
கடைந்தேயமுதிமையோர்க்கருண்மாயன்கதிபெறவுள்
ளுடைந்தேய்வுருத்தமொழிந்தேனிகத்தெவரொப்பெனக்கே. (௧௦௪)

தனக்குற்றசெல்வமணவாளமாமுனியென்றிருப்பார்
மனக்குற்றநீங்கிமலமற்றுஞானவழிக்கணின்று
சினக்குற்றமாற்றிப்பின்றம்போலருள்பெறச்செய்துநம்மா
றனக்குற்றமெய்ப்பதம்வேண்டியபோதவர்சார்குவரே. (௧௦௫)

சார்ந்தேனுனதுசரணம்புயத்தைத்தலைக்கொடிவ
ணார்ந்தேனுனதடியார்தமக்காட்செயவன்பர்தந்நோ
யீர்ந்தேயருளுமணவாளயோகியிதிற்பெரிதோ
பேர்ந்தேயொளிருந்திருநாட்டிடையுறும்பேரின்பமே. (௧௦௬)

இன்புற்றஞானத்திராமாநுசன்றனிணையடிக்க
ணன்புற்றுநீயிங்கிருப்பதுபோலவனுதினமுந்
துன்பத்தைநீக்கிமணவாளயோகித்தொல்லுலகிற்
புன்பற்றகற்றப்புனைந்தேன்சிறந்தநின்பூங்கழலே. (௧௦௭)

மணவாளமாமுனி நூற்றந்தாதி முற்றிற்று.